RESEARCH ARTICLE

INDIAN JOURNAL OF TAMIL

Asian Research Association

DOI: 10.54392/ijot2621

# Discovery and Restoration of an Obsolete Form of Mahidikkoothu in the Mullaitivu Region - A Study

**Nadarasa Ketheeswari** [a, *]

[a] Department of Fine Arts, Eastn University, Vantharumulai, Sri Lanka
*Corresponding author Email: priyakethu4@gmail.com
DOI: https://doi.org/10.54392/ijot2621
Received: 09-01-2026; Revised: 17-03-2026; Accepted: 22-03-2026; Published: 03-04-2026

**Abstract:** Mullaitivu is a region in the northern part of Sri Lanka with a long tradition and history in the development of Kooththu Art. Here, talented Annavimars, Performers of Kooththu, script writers, Pakkapattu artists, costume and makeup artist, etc., are found. The lifestyle of the people is revealed in this village in a special way through Kooththu. Thus, the Mahidikkooththu practiced here is a people-centred stage-based form, combining stories, societies, and events of the time and performing it in an open space with specific stage elements. This Kooththu has not changed with the passage of time, the arrival of modern theatre, and place names. However, this form of Kooththu is necessary to connect people with the contemporary theatre trend and to express their creative potential. In addition, it is a medium to pass on theatre techniques and its unique features to the younger generation. Thus, the social, economic and cultural factors that led to the obsolescence of the Mahidikkooththu, which was performed fifty years ago in the Mullaitivu region, are identified and re-examined, its performance system and its subsequent status are examined through the process. Since this study is a sociological study, the research methodology of Exploratory Method and Qualitative Research Design were followed. When the performance is performed through fieldwork, data is collected and analyzed. The purpose of the study is to revive an obsolete performance form. The research problem is the failure to revive Mahidikkooththu.

**Keywords:** Restoration, Art Centre, Mahidikkooththu, Contemporary Theatre, Creation

# முல்லைத்தீவுப் பிரதேசத்தில் வழக்கிழந்த மகிடிக்கூத்து வடிவம் ஒன்றைக் கண்டடைதலும் மீளாற்றுகையும் - ஓர் ஆற்றுகை மைய ஆய்வு

**நடராசா கேதீஸ்வரி** [அ *]

[அ] கிழக்குப் பல்கலைக்கழகம், வந்தாறுமூலை, இலங்கை

## முன்னுரை

மகிடிக்கூத்து சமகால அரங்க ஆற்றுகைக்கான முக்கிய கூறுகளைக் கொண்டவை. பாரம்பரியமாக ஆடப்பட்டு வந்த இக்கூத்து மரபு மந்திரதந்திர விளையாட்டுக்களையும், வந்தோருக்கும் இருந்தோருக்குமிடையிலான தரகராற்றினைக் கூறுவதோடு, இன ஒருமைப்பாடு நல்லிணக்கதையும் வலியுறுத்துகின்றது. முல்லைத்தீவுப் பிரதேசத்திலே ஏற்பட்ட யுத்தப்பேரழிவு, இடப்பெயர்வு அதன் பின்னரான முகாம் வாழ்வுச்சூழல், நவகாலனியச் சிந்தனை ஆகியன மக்கள் சிந்தனையில் மாற்றங்களை ஏற்படுத்தியன. இதனால், இம்மகிடிக்கூத்து இடைக்காலத்தில் ஆற்றுகை செய்யப்படாது விடுபட்டுள்ளது. ஆனால், இம்மக்களுக்குப் பாரம்பரிய அரங்கு வாழ்வை மீளக்கட்டமைப்பதற்குப் பெருந்துணை புரிந்துள்ளது. இதனால், மகிடிக்கூத்து வடிவத்தின் இருப்புப் பற்றித் தேடல் அவசியம் எனப்புலப்பட்டது. இம்மக்கள் தமது பாரம்பரியக் கூத்துக்களைச் சடங்காகவும், மகிழ்வூட்டலாகவும் முன்னெடுத்துள்ளனர். பாரம்பரியக் கலைகளின் சமகாலத் தேவையினையும், அவற்றின் முக்கியத்துவத்தையும் வலியுறுத்தி எதிர்காலத் தலைமுறையினருக்கு மகிடிக்கூத்தினைக் கையளிக்க, அடிப்புறப் பண்பாட்டில் இருந்து ஆற்றுகை மையச் செயற்பாட்டினை முன்னெடுத்து வழங்கப்படுகின்றது.

## இலக்கிய மீளாய்வு

மகிடிக்கூத்து இச்சமூக மக்களினாலும், அறிஞர்களினாலும் கவனிக்கப்படாமல் காணப்பட்டமையை அறிந்து சி.மௌனகுருனால் முதலில் "மட்டக்களப்பு மரபுவழி நாடகம்" என்னும் ஆய்வில் ஆராயப்பட்டுள்ளது. இதில் மட்டக்களப்பு மகிடிக்கூத்து ஆற்றுகை, அழகியல் தொடர்பாக குறிப்பிட்டு விளக்கியுள்ளார். இதன் தொடர்ச்சியாக சீவரட்ணம் மகிடிக்கூத்து பற்றிய தனது ஆய்வு கட்டுரையில் நான்காவது மகிடிக் கூத்துத் தொடர்பான கருத்துக்களை முன்வைத்துள்ளார். செ. காரை சுந்நதரம்பிள்ளை அவர்களின் "வட இலங்கை நாட்டார் அரங்கு" எனும் ஆய்வில், முல்லைத்தீவு மகிடிக்கூத்து ஆற்றுகை, அதன் வகை பற்றிய தெளிவு புலப்படுகிறது. இவ்வாய்வுகள் அவ்வாய்வாளர்களது நோக்கம், தேவை, ஆய்வுப்பிரச்சினைகளை மையப்படுத்தி மேற்கொள்ளப்பட்டுள்ளன. இவ்வாய்வு மக்களிடையே குறித்த காலத்தில் விடுபட்டிருந்த மகிடிக்கூத்தினை ஆற்றுகை நிலைக்கு இட்டுச்செல்லும் நோக்காக இவ்வாய்வு அமைந்துள்ளது. மகிடிக்கூத்தை கண்டடையும் முயற்சியும் அதை மீள ஆற்றுகை செய்யும் முயற்சியும் கொள்ளப்பட்டது.

## ஆய்வுமுறையியல்

இவ்வாய்வில் விளக்கமுறையியல் *(Exploratory Method)*, பண்புசார் ஆய்வு முறையியல் *(Qualitative research design)* எனும் ஆய்வு நுணுக்கம் பின்பற்றப்பட்டு, ஆய்வு முன்னெடுக்கப்படுகின்றது. அத்துடன், வரலாற்று ஆய்வுமுறையியலும் கையாளப்படுகின்றது. களச் செயற்பாட்டினூடாக மீளாற்றுகை செய்யப்படும் பொழுது தகவல்கள் சேகரிக்கப்பட்டு பகுக்கப்படுகின்றது. நேர்காணல், அவதானம், கலந்துரையாடல் மூலமும் பயன்படுத்தப்படுகின்றது. ஆய்வின் நோக்கம் வழக்கிழந்த ஆற்றுகை வடிவம் ஒன்றை மீளாற்றுகை செய்வதாகும். ஆய்வுப் பிரச்சினை மகிடிக்கூத்தை மீளாற்றுகை செய்யப்படாமை.

குறிப்பாக, கலந்துரையாடல் வடிவில் முள்ளியவளைப் பிரதேசத்தில் ஐப்பது வருடங்களுக்கு முன்னர் ஆற்றுகை செய்யப்பட்ட மகிடிக் கூத்தினை மீளாற்றுகை நிலைக்குக கொண்டு வருவதற்கு, ஆற்றுகை மைய ஆய்வுச் செயற்பாட்டினை முன்னெடுக்கும் நோக்கில் நேரடியாக ஆற்றுகைக் கலைஞர்களையும், அண்ணாவிமார்களையும், களத்துக்கு சென்று கலந்துரையாடல் மேற்கொள்ளப்பட்டது. ஞாபகப்படுத்தல் என்னும் செயற்பாட்டை மையப்படுத்தி மகிடிக்கூத்தின் அழகியல், ஆற்றுகை போன்றன அண்ணாவியாரின் நினைவில் ஐம்பது வருட காலம் பொக்கிஷமாக பாதுகாக்கப்பட்டு பழமை மாறாமல் இருந்த ஆற்றுகையை ஞாபகப்படுத்தி மீளாற்றுகைக்கு கொண்டுவருதற்கான கலந்துரையாடலாக அமைந்தது.

## கண்டுபிடிப்பும் கலந்துரையாடலும்

### மீளாற்றுகை நிலைக்குக் கொண்டு வருவதற்கான செயற்பாடுகள்

கூத்தரங்கின் திறந்த வெளி செயற்பாட்டு மையம் மக்களின் வாழ்வியலை இணைத்து அதன் அழகியல் நுணுக்கங்கள் மூலம் ஆற்றுகை செய்யப்படுகின்றது. இதன் தொடர் செயற்பாட்டின் பொறி முறை செய்கையை மையப்படுத்தி, சமுதாய அரங்கத் தன்மையின் கூறுகளை வலுப்படுத்துவது. களரியடித்துப் பயிலும் காலங்கள் மக்கள் ஊடாட்டத்தின் கருத்தோட்டத்தை வெளிப்படுத்தும். சமுதாய இணைவின் ஊடாட்டமும், அபிப்பிராயம் கூறுதலும் சேர்ந்து கூட்டுணர்வு வடிவத்தைத் தருகின்றன (சந்திரகுமார்.சு, 2020, p. 224). முல்லைமோடிக் கூத்தான கோவலன் கூத்து களரியப்பதற்கு அமைக்கப்பட்ட வட்டக்களரியில் தான் மகிடிக் கூத்துக்கான களரியடித்தல் தொடர்ச் செயற்பாடு முன்னெடுக்கப்பட்டது. கூத்து சமுதாய அரங்கத்தன்மைக் கூறுகளை வலுப்படுத்துவது, களரியடித்துப் பயிலும் காலங்கள் மக்கள் ஊடாட்டத்தின் கருத்தோட்டத்தை வெளிப்படுத்துவது. சமுதாய இணைவின் ஊடாட்டமும், அபிப்பிராயம் கூறுதலும் சேர்ந்து கூட்டுணர்வு வடிவத்தைத் தருகின்றன.

இப்பிரதேசத்தில் கூத்தர்கள் பாரம்பரியக் கலைகள்மீது ஆர்வம் கொண்டவர்களாகக் காணப்படுகிறார்கள். முள்ளியவளைப் பிரதேசத்தின் கலைகள் தொடர்பாக ஆற்றுகைமைய ஆய்வினை மேற்கொண்டபோது அண்ணாவியார்களையும், மூத்த கலைஞர்களையும், சந்திக்க முடிந்தது. "இப்பிரதேசத்தில் ஐம்பது வருடங்களுக்கு முன்னர் அரியாம் பொய்கை செல்லத்துரை அண்ணாவியார், தன்னுடைய தந்தை சந்திரசேகரம் ஆகிய இருவராலும் ஆற்றுகை செய்யப்பட்ட மகிடிக்கூத்தானது இன்று வழக்கிழந்த கலை வடிவமாக காணப்படுவதாக கூறினார். இக்கலை வடிவம் 2011 ஆம் ஆண்டு இசை கலை நிகழ்விற்காக யாழ்ப்பாணத்தில் சிறிய பகுதி மட்டும் ஆற்றுகை செய்யப்பட்டது. பின்னர் தற்போது வரை முழுமையாக ஆற்றுகை செய்யப்படவில்லை எனக் கூறியதுடன் அதனை ஆடுவதற்கும், தொடர்ச்சியாக முன்னெடுப்பதற்கும் யாரும் முன்வரவில்லை என்ற கருத்துக்களை கூறினார். மகிடிக் கூத்தின் பாடல்களைப் பாடி அதன் ஆட்டத்தினையும் ஆடி நடித்துக்காட்டினார். இக்கூத்து ஆரம்பக் காலத்தில் பொழுதுபோக்கு இல்லா காரணத்தால் நகைச்சுவையாகவும்,

கேலிக்கையாகவும் நிகழ்த்தப்பட்டது என கூறி தான் அதனை திரும்ப நிகழ்த்துவதில் பெரும் மகிழ்ச்சியடைவதாகவும் கூறினார் (நேர்காணல், ச.சிவசிதம்பரம்).

இக்கூத்தின் ஆரம்ப நிலை ஆற்றுகை, கதைப்போக்கு, உரையாடல் போன்ற விடயங்கள் முன்வைக்கப்பட்டது. முல்லைத்தீவு மாவட்டத்தில் மூன்று வகையான கூத்துக்கள் உள்ளன. அதன் கதை முஸ்லிம்களுக்கும், பிராமணர்களுக்கும் இடையில் உள்ள தகராற்றை மையமாக கொண்டு ஒரு நகைச்சுவை தன்மையில் திறந்த வெளியில் முன்னெடுக்கப்பட்டதாக கலந்துரையாடப்பட்டது. முள்ளியவளைப் பிரதேசத்தில் ஆற்றுகை செய்யப்பட்ட மகிடிக் கூத்தும் இதன் மையக் கதையைக் கருவாகக் கொண்டாலும் ஆற்றகைத் தன்மையில் சற்று வித்தியாசாம் உள்ளது எனவும், தான் சிறுவயதாக இருக்கும் போது தன்னுடைய தந்தையார் மகிடிக்கூத்தினை தலைமை தாங்கி தாயாரித்து, பொலிஸ்பாத்திரம் ஏற்று நடித்ததாகவும் கூறினார் (நேர்காணல், ச.சிவசிதம்பரம்). இதனையே அண்ணாவியார் நடேசு சுப்பிரமணியமும் குறிப்பிட்டார்.

இதன் பின்னர், ச.சிவசிதம்பரம், மணியம் ஆகியோருடன் இணைந்து மகிடிக்கூத்து யாரை வைத்துப் பழகுவது, மீளச் செய்ய முடியுமா? என்ற கேள்விகள் ஊடாக ஆடிய - பார்த்த அனுபவங்களையும், ஞாபகத்தில் உள்ள விடயங்களையும் மையமாகக் கொண்டு ஆற்றுகை செய்யலாம் என்ற கருத்துக்கள் உரையாடப்பட்டது. ஆற்றுகை செய்வதற்கான கலைஞர்களைச் சந்திக்க செய்யும் முன்னெடுப்புக்கள் மேற்கொள்ளப்பட்டது.

மகிடிக்கூத்தினைப் பழகுவதற்கு அவரிடம் உள்ள கலைஞர்களைச் சந்திக்கச் செய்து மகிடிக்கூத்தின் பாரம்பரியம், அதன் ஆற்றுகை தன்மை தொடர்பான கலந்துரையாடல் நடைப்பெற்றது. கலைஞர்கள் பல கூத்துக்களை ஆடிய அனுபவம் இருப்பதால் இலகுவில் அவர்கள் ஆடுவார்கள் என தீர்மானிக்கப்பட்டது. மகிடிக்கூத்தின் ஆரம்ப வரலாறு, ஆற்றுகை முறைமை, கதை, பாத்திர உருவாக்கம், நகைச்சுவை எனப் பல விடயங்கள் கலந்துரையாடப்பட்டது. இதனைத் தொடர்ந்து வெவ்வேறு பாத்திரங்கள் உள்ளதால் தங்களுக்குப் பொருத்தமான நேரத்தில் தனித்தனியாக அண்ணாவியாரிடம் பழகினார்கள். பின்னர் எல்லோரும் இணைந்து பழகுவதற்கான காலம் அறிவிக்கப்பட்டு, களரியடித்தல் ஆரம்பிக்கப்பட்டது.

## களரியடித்தலும் ஆற்றுகை முன்னெடுப்பும்

கலைஞர்களின் ஓய்வு நேரத்தை மையப்படுத்தி முதல் களரியடித்தல் நடைப்பெற்றது. பின்னர், கலைஞர்கள் பகலில் தொழிலுக்குச் செல்வதால் இரவு நேரத்திலும், விடுமுறை நாட்களிலும் பயிற்சிகள் கொடுக்கப்பட்டன. "களரியடித்தல் வெளி சமுதாய வாழ்வியலையும், ஆற்றுப்படுத்தலையும் படிப்படியாக வலுப்படுத்தும் திறந்தவெளி ஆற்றுகைக் களமாகும்" (சந்திரகுமார்.சு, 2019, p. 645). இதனால், இக்களரியடித்தல் வெளியில் பயிற்சி கொடுக்கும்பொழுது ஆட்டல், பாடல் முதலான பயிற்சிகள் ஊடாக ஆற்றுகை உருவாகி வலுவடையும். இக்காலத்தில் அண்ணாவியார் ச.சிவசிதம்பரம், அண்ணாவியார் என்.எஸ் மணியம் ஆகியோர் மகிடிக்கூத்துத் தொடர்பாக அறிமுகம் செய்து, கலைஞர்களுக்குப் பாடலையும், ஆடலையும், உரையாடல் தன்மையினையும் அவர்களுடன் இணைந்து நடித்துப் பழக்கினர். ஆட்டத்தினை ஆற்றுகை, அழகியல் தன்மையில் உருவாக்கினர். எனவே, நாடக ஆய்வாளர் சு. சந்திரகுமார் குறிப்பிவது போன்று, களரியடித்தல் செயற்பாடு மத்தளம் அடிக்கும் புதிய கலைஞர்களையும், இளம் கூத்துக்கலைஞர்களையும் உருவாக்கும் உன்னதப் பணியினை செய்தது (சந்திரகுமார்.சு, 2019).

இதன் பின்னர் தொடர்ச்சியாக இரண்டாம் நாள் களரியடிக்கப்பட்டது. அண்ணாவியார், கலைஞர்கள் மகிடிக்கூத்தின் பாடல்களைப் பாடுவதற்கு வழிப்படுத்தினார். இதனைத் தொடர்ந்து ஆர்வத்துடன் பாடல்களைப் பாடி ஆடினார்கள். மூன்றாவது நாள் கலைஞர்களை வட்டமாக நிற்க வைத்து அண்ணாவியார் முதலாவது பாடலைப் பாடுவதற்குப் பழக்கினார். பாடுவதற்கு சிரமப்படும் கலைஞர்களை உற்சாகப்படுத்தி ஒன்றிணைத்தார். மகிடிக்கூத்தின் களரியடித்தல் செயற்பாட்டின் அடுத்தகட்டமாக ஆட்டக்கோலங்கள் பழக்கப்பட்டபோது ஏற்படும் இடர்பாடுகளை அவதானித்து கலந்துரையாடிச் சிறந்த முறையில் கலைஞர்களுக்கு பாத்திர வேறுபாட்டை விளக்கிப் பிராமணர், முஸ்லிம் வியாபாரி தலைவன், பேய்குஞ்சுகள் போன்ற பாத்திரங்களின் ஆட்டக்கோலங்களை இணைத்து ஆடி நெறிப்படுத்தப்பட்டது. பாத்திரங்களின் பேச்சு வழக்கு உரையாடல் ஆட்ட நெலிவு அபிநயம், செய்கைகள், இசைக்கேற்ப உடலைப் பயன்படுத்தல் போன்றவை ஒத்திகைமூலம் வழங்கப்பட்டது. திறந்தவெளியில் ஆடியவாறு நகர்தல், முஸ்லிம்களின் மொழியைப் பேசுதல் போன்ற விடயங்களைக் கவனத்தில்கொண்டு சரியான பயிற்சிமூலம் ஆட்டத்தினை பழக்குவதற்கான ஆரம்ப கட்டச் செயற்பாட்டினை தொடர்ந்து, இரு தினங்கள் மேற்கொள்ள வேண்டிய தேவை காணப்பட்டது.

மத்தளம் வாசிக்க அண்ணாவிமார்கள் பாடி, ஆடித் தாளம் வாசிக்க முஸ்லிம், பிராமணர், பேய்க்குஞ்சுகள் போன்ற பாத்திரங்கள் உடல் மொழியால் நடிப்பினை வெளிப்படுத்தும் வகையில் ஆடி பழகும் போது அண்ணாவியாரும் சின்ன மரைக்காயருக்கு பாத்திரம் ஏற்று கலைஞர்களுடன் இணைந்து நடித்து சமூக வெளிப்பாட்டையும், அழகியல் உணர்வு, உளவியல் தன்மை போன்றவற்றை இரசித்துச்

சுவைப்பது மட்டுமல்லாது கலைஞர்களின் உள்ளங்களில் நிறைந்து பகிர்வதற்காகவும், ஊடாடுவதற்காகவும் களரியடித்தல் தொடர் செயற்பாடு காணப்பட்டது.

பின்னர், ஒவ்வொரு பாடலுக்குமான ஆட்டங்களும் தனித்தனியாக பழக்கப்பட்டன. மேலும் ஆட்டக்கோலத்தில் திறந்த வெளியில் பிராமணர்களுக்கு உரிய இடத்தில் நின்று ஆடுதல். கம்பம் ஊன்றிக் கும்பம் வைக்கும் இடத்தில் பூசாரியின் செயற்பாடு, முஸ்லீம்களின் வியாபாரச் செயற்பாடு, ஆட்டம், உரையாடல் போன்றனவும், நிரையாக வருதல், மீளவும் வட்டமாக உள் வட்டமாகவும், வந்து ஆடுதல் போன்றனவும் களரியடித்தல் செயற்பாட்டில் அண்ணாவியாரல் பழக்கப்பட்டது. மகிடிக்கூத்தில் பயன்படுத்தும் காவடி, கரகம் போன்ற ஆட்டங்கள் மத்தள தாள இசையுடன் ஆடி ஒத்திகை பார்க்கப்பட்டது.

பெரிய மரைக்காயருக்கு நடித்தவர் முஸ்லிம் பாசையில் பேசாமல் தமிழ்மொழியில் பேசுகையில், அண்ணாவியார் அந்த இடத்தில் பிழையினைச் சுட்டிக்காட்டிப் பக்குவமாக ஆடிப்பாடி நடித்துக்காட்டினார். சிறப்பாக நெறிப்படுத்தி ஆடல், பாடல், கால் அசைவினை அவர்களுடன் இணைந்து ஆடிக்காட்டினார். ஞாபகப்படுத்தல்மூலம் தான் பார்த்த, பங்குகொண்ட அனுபவங்களை வைத்துக்கொண்டு தனது வயது முதிர்ந்த காலத்திலும் இளம் தலைமுறையினருடன் இணைந்து பாத்திரம் ஏற்று நடித்து கலை அனுபவத்தை வெளிப்படுத்தினார். அதன்பொழுது, ஆடல், பாடல், கூத்தர்களின் திறன், அழகியல், சமுதாய ஊடாட்டம் ஆகியன பற்றி உற்றுநோக்க முடிந்தது.

இந்தப் பயிற்சிமூலம் திறனும், ஆற்றலும் வளர்ந்ததுடன், புதிய கூத்து அனுபவத்தையும், நெறிமுறையையும் பெற்றுக்கொண்டனர். “மகிடிக்கூத்தில் பேய்குஞ்சு பாத்திரத்தை ஆடினேன். மகிடிக்கூத்து இதுவரைக்கும் ஆடியதை பார்த்தது இல்லை. இதனை மூத்த கலைஞர்களின் வாய்வழியாக ஐம்பது வருடங்களுக்கு முன்னர் ஆற்றுகை செய்யப்பட்டதாக அறிந்து கொண்டேன். இச் செயற்பாடு பெரும் வெற்றியாகவும், தொடர்ந்து இதனை முன்னெடுக்க வேண்டும் என்ற உத்வேகத்தினையும் கொடுத்துள்ளது” எனும் கூற்று குறிப்பிடத்தக்கது. நேர்காணல்: து.கஜேந்திரன்).

கலைஞர்களுக்கும் மக்களுக்கும் இடையில் நல்ல புரிந்துணர்வையும், நல்லுறவையும் வெளிக்கொணரும் நோக்கில் இச்செயற்பாடு அமைந்துள்ளது. இறுதி களரியடித்தலின் போது கிழக்குப்பல்கலைக்கழகத்தின் முதுநிலை விரிவுரையாளரும், மேற்பார்வையாளருமான திரு.சு. சந்திரகுமார் கூத்தர்களுடன் நேரடியாகக்கலந்து கொண்டு மட்டக்களப்பு பல்கலைக்கழகத்தில் ஆற்றுகை செய்யப்பட்டு அதில் தானும் ஆடிய மகிடிக்கூத்து ஆற்றுகை தொடர்பாகவும், அதில் எவ்வாறு சமூகம் சார்ந்த பிரச்சினையை வெளிப்படுத்தப் புதிய பாத்திரங்கள் உருவாக்கிய விதம் தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டது. இரு இனம் தொடர்பான கருத்தை மையமாகக் கொண்டு இருப்பதால் சமூக நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் பாத்திரங்கள் உருவாக்கள், உரையாடும் விதம் தொடர்பாகவும் இவரால் கருத்துக்கள் முன்வைக்கப்பட்டன.

கிழக்கிலங்கையில் ஆடப்படும் மகிடிக் கூத்து “மந்திர தந்திரத்தைச் சடங்கு நுட்பமுறையில் இணைத்துப் படைப்பதும் அதில் உடலைக்கேலி செய்வதனூடாக அதிகாரத்தை அங்கதமாக்குவதும் மேலேழுகின்றது. குறிப்பாக, மகிடிக்கூத்து சமூக ஒடுக்குதலின் அதிகாரத்தை எதிர்க்கச் சடங்குவடிவம் நின்று உடலை அங்கதமாக்கும் ஆற்றுகைமரபு. ஆற்றக்கூடிய உடல் ஆற்றுகை உருவாக்குனருக்கு அவசியம். இவ்வுடலாற்றுகை அதற்கான உடல்மொழிப் பிரயோகத்தில் வெளியாகிறது. திறந்தவெளியில் இவ்வகை ஆற்றுகை உருவாக்கம் மேலேழும் பொழுது பண்பாட்டுத் தனித்துவத்தையும் ஆற்றுகை அடையாளத்தையும் தரும்” (சந்திரகுமார்.சு, 2022, p. 98) என்பதும் கவனத்திற்குரியது.

## மகிடிக்கூத்து அரங்கேற்றிய முறைமை

காட்டு விநாயகர் ஆலயத்தின் திறந்தவெளி முன்றலில் நான்கு கம்பம் ஊன்றி மேலே கிடுகினால் பந்தல் அமைத்து பழைய முறைப்படி அரங்கு அமைக்கப்பட்டது. பிராமணர்களுக்கான ஆலயமாக அலங்கரித்து உள்ளே பிள்ளையார் சிலை ஒன்று வைத்து, பூசைப்பொருட்கள் வைக்கப்பட்டது. அமைக்கப்பட்ட பிராமணர் ஆலயத்தின் முன்னால் 10 அடி தூரத்தில் கொடிக்கம்பம் நாட்டி விபூதி, சந்தனம், குங்குமம் போன்றவற்றால் கம்பத்தினை அலங்கரித்து, சுற்றிவர நான்கு கும்பங்கள் வைக்கப்படும். முஸ்லிம்களுக்கான பந்தலைக்காட்ட கொடிமரம் ஒன்று நாட்டி மேலே அவர்களின் சின்னம் வரைந்த கொடி கட்டப்பட்டியிருக்கும். முஸ்லிம்கள் வியாபாரம் செய்யும் கடை ஒன்று அமைக்கப்பட்டு ஆற்றுகை செய்வதற்கான அரங்காக அமைக்கப்பட்டது. இவை அனைத்தும் அண்ணாவியார் சிவசிதம்பரம் அவர்களின் ஞாபகப்படுத்தல் அனுபவத்தைக் கொண்டு இளம் கலைஞர்களை மையப்படுத்தி அமைக்கப்பட்டது.

அரங்கை அமைத்ததன் பின்னர், முள்ளியவளைப் பிரதேசத்தில் அன்னளவாக ஐம்பது வருடங்களுக்கு முன்னர் ஆற்றுகை செய்யப்பட்ட மகிடிக் கூத்தினை 2022.06.26 அன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 4.00 மணியளவில் அரங்கேற்ற விழாவாக காட்டுவிநாயர் ஆலய முன்றலில் வரலாற்றுச் சிறப்பு மிக்க கலை நிகழ்வாக ஆற்றுகை செய்யப்பட்டது. இதில் பிரதம அதிதியாக

சட்டதரணி திரு.த.பரஞ்சோதி (காட்டு விநாயகர் ஆலயதலைவர்) அவர்களும். சிறப்பு அதிதிகளாக நுண்கலைத்துறை முதுநிலை விரிவுரையாளரும் ஆய்வு மேற்பார்வையாளருமான சு.சந்திரகுமார் அவர்களும், அண்ணாவியார் திரு. ந.சுப்பிரமணியம் (என்.எஸ். மணியம்) அவர்களும், மகிடிக்கூத்து அண்ணாவியார் திரு.ச.சிவசிதம்பரம் அவர்களும் கலந்து சிறப்பித்தனர். கௌரவ அதிதிகளாக முன்னால் பாராளுமன்ற உறுப்பினர் திரு.க. கனகரட்ணம் அவர்களும், திரு.சு.தியாகராசா அவர்களும், கலந்து கொண்டனர். ஆலய பரம்பரை பூசகர், ஆலய பிரதம குருக்கள், கலைஞர்களின் பெற்றோர்கள், கலை ஆர்வலர்கள், அண்ணாவிமார்கள், கலைஞர்கள், ஊர் இளைஞர்கள், மக்கள் எனப் பலர் இணைந்து சிறப்பித்தனர். மக்கள் கொண்டாடி மகிழ்ந்து பார்த்து இதன் ஆற்றுகையைப் பார்த்து மகிழ்ந்ததோடு, இதன் முக்கியத்துவம் பற்றியும், இதன் தேவை பற்றியும் உரையாடினர். அதிதிகளும் பல கருத்துக்களைத் தெரிவித்தனர்.

ஐம்பது வருடங்களுக்கு முன்னர் முள்ளியவளைப் பிரதேசத்தில் ஆற்றுகை செய்யப்பட்ட மகிடிக்கூத்து அறிமுகம், பின்னர் ஏன் தொடர்ச்சியாக ஆற்றுகை செய்யாமைக்கான காரணங்களை அறிந்து மீளக் கலைஞர்களை ஒன்றிணைத்து ஆற்றுகை செய்தமை உணர்த்தப்பட்டது. இந்நிகழ்வில் தலைமை உரையினை ஆலயத்தின் தலைவர் திரு.த.பரம்ஞ்சோதி (சட்டத்தரணி) அவர்கள் பிரதம அதிதி உரையாற்றும் போது இவ்வாலயத்தில் பல கலை வடிவங்கள் ஆற்றுகை செய்யப்பட்டு வருகின்றது. எனினும் மிக நீண்டகாலத்திற்குப் பின்னர் இன்று மகிடிக் கூத்து ஆடுவதற்கு இவ்வாய்வு கலைஞர்கள் மேற்கொண்ட முயற்சியினை பாராட்டுகின்றோம். தற்பொழுது மகிடிக் கூத்தினை மீளவும் முன்னெடுக்கும் நோக்குடன் முள்ளியவளை கலைஞர்களை ஒன்றிணைத்து அண்ணாவியார் ச.சிவசிதம்பரம், N. S. மணியம் அவர்களால் பழக்கப்பட்டமை மிகவும் வரவேற்கத்தக்க ஒரு விடயமாகும். எமது பாரம்பரியக் கலைகளைப் பாதுகாத்து ஆவணப்படுத்த வேண்டும் என்ற ஆர்வத்தினை கலைஞர்கள் மத்தியில் தூண்டியுள்ளமை அதன் நிலைபெறும் தன்மையினை மேலும் உறுதி செய்துள்ளது. சிறப்புரையினை கிழக்குப் பல்கலைக்கழகத்தின் நுண்கலைத்துறையினுடைய முதுநிலை விரிவுரையாளர் சு.சந்திரகுமார் அவர்கள் ஆற்றினார். சு. சந்திரகுமார் அதன்போது "பாரம்பரியக் கலைகளின் மூல வேர்களைத் தேடும் செயற்பாடுகளில் ஒன்றாக ஆற்றுகைமைய ஆய்வு பங்குகொள் செயற்பாடு காணப்படுவதாகவும், நவீனமயமாக்கம், இணையவழி தொடர்பாடல் காரணமாக பாரம்பரியக் கலைகள் பல சிதைவுகளுக்கு தள்ளப்பட்டுள்ளதை காணலாம். எமது பாரம்பரியக் கலையினை வளர்ந்து வரும் தலைமுறையினருக்கு கையளிக்க வேண்டிய தேவை இருப்பதால் அதன் மூத்த கலைஞர்கள் ஒவ்வொரு பிரதேசங்களிலும் வெவ்வேறு தளங்களில் நிகழ்த்தி வருகின்றனர். முள்ளியவளைப் பிரதேசமானது பாரம்பரிய கலையின் பொக்கிஷமாகவும் மூலவேர்களின் பண்பாட்டு வெளியாகவும் அமைந்துள்ளது. நுண்கலைத்துறையினுடைய இறுதி வருட மாணவர்களின் ஆய்வுச் செயற்பாடுகள் பாரம்பரிய கலைகளை முன்னெடுத்துச் செல்வதாக அமைந்துள்ளது. அந்த வகையில் மாணவி நடராசா கேதீஸ்வரி முன்னெடுக்கும் மகிடிக் கூத்து பற்றிய ஆற்றுகைமைய ஆய்வில் ஈடுபடுவதற்கு காரணம் பல்கலைக்கழகத்தில் பங்குகொண்ட ஆற்றுகை மைய செயற்பாடுகளே ஆகும். 'அடிப்புறத்திலிருந்து அடிப்புறத்துக்கு' என்னும் கோட்பாட்பாட்டின் விரிவாக்கத்தை ஆராய்ந்து வலுப்படுத்தி இந்த ஆற்றுகைமைய கற்றல் கற்பித்தல் செயற்பாட்டை மாணவர்கள் முன்னெடுத்தலின் செயற்பாடாக மகிடிக்கூத்து முன்னெடுக்கப்படுகிறது" எனக் கருத்துரைத்தார்.

ஆற்றுகையால் மனிதர்களை உடல்வளமும், மகிழ்ச்சியும், உள்ளத்திறனும், புத்திக்கூர்மையும் கொண்டவர்களாக வளர்த்தெடுப்பதற்கு ஒரு விளையாட்டாகவும், கல்விமுறையாகவும், உள ஆற்றுப்படுத்தலுக்கான சிறந்த ஊடகமாகவும் பாரம்பரிய கலைகள் காணப்படுகிறன. மகிடிக் கூத்தினை ஆடுவதனால் உடல்வளமும், மன ஒருமைப்பாடும், சமூக ஒற்றுமையும் கொண்டவர்களாக மாற்றம் அடைய இக்கலைவடிவம் உதவுகிறது.

கூத்து ஆடப்படும் போது கடந்த காலங்களில் நடைபெற்ற அனுபவங்கள், வரலாற்றுச் சம்பவங்கள் கூத்தினை பார்க்கும் பார்வையாளர்களிடம் பகிர்ந்து கொள்ளப்படும். இச்செயற்பாடு அடுத்த தலைமுறைக்கு எமது பண்பாடு, வரலாற்றினை கையளிப்பு செய்யும் இயங்கு நிலை கற்கைச் சூலழாகவும் அமைகிறது எனக் கூறினார். கூத்துக் களரியைச்சுற்றி ஊர்மக்கள், பார்ப்போராகவும், பங்குகொள்பவராகவும் பெருக்கெடுத்தனர். சிறுவர், சிறுமியர், பாடசாலை மாணவர்கள், முதியோர்கள், இளைஞர், யுவதியர், உத்தியோகத்தர்கள், பல்கலைக்கழக மாணவர்கள், விரிவுரையாளர்கள் எனப் பலரும் கூட்டாக கலந்து கொண்டனர்.

இன்று நாம் நவீனத்தின் மேல் நிலை சக்தியால் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். அதனால் மன அமைதி, கூட்டு வாழ்க்கை முறைமை ஒருவரிடத்திலும் இல்லை. பொறாமை, போட்டி, கொலை, தற்கொலை, புரிந்துணர்வு இன்மை என்பன தாராளமாக நடைபெறுகின்றது. இதற்குக் காரணமாக அமைவது விட்டுகொடுப்பு, மகிழ்ச்சி, மன அமைதி இன்மையாகும். ஒருவர் ஒருவருடன் உரையாடுவதற்கு நேரமில்லை, கூட்டாக வாழ்வது கிடையாது. இதற்குக் காரணமாக அமைவது, பாரம்பரியக் கலைகளை நாம் தொலைத்துவிட்டே ஆகும். பாரம்பரியக் கலைகள் வெறுமனே பொழுது போக்கிற்கானது மட்டுமல்ல, அறிவியல் ரீதியான சிந்தனையைத் தூண்டுகின்றதும், மன நெகிழ்ச்சியை ஏற்படுத்தல், கூட்டாகச் செயற்பட்டு உண்மையான மனிதர்களாக வாழ்வதற்கும் பாரம்பரியக் கலைகள் துணை செய்கின்றது (சந்திரகுமார்.சு, 2019, p. 646).

அண்ணாவியார் கலைஞர்கள் காட்டு விநாயகர் முன்னிலையில் ஆற்றுகையைத் தாளத்திற்கும், பாடலுக்கும் ஏற்றாற்போல கதைப் போக்கினையும், ஆட்டத்தினையும் மேற்கொண்டனர். இது அழகியல் பூர்வமானதாகப் பார்வையாளர்களைக் கவரத்தக்க வகையில் அமைந்தது. ஆற்றுகையின் பின்னர் கலைஞர்களுக்கு பல்கலைக்கழக விரிவுரையாளர்கள், பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள், கலைஞர்கள், நலன்விரும்பிகள் என பலரும் பாராட்டுக்களையும் வாழ்த்துக்களையும் தெரிவித்தனர். இவ் விதமாக வழக்கிழந்து காணப்பட்ட மகிடிக்கூத்தினை மீள் ஆற்றுகை செய்து, ஆவணப்படுத்தி தொடர்ந்து ஆற்றுகை நிலையில் செயற்படுவதற்கான விழிப்புணர்வை கொடுக்கும் வகையில் அரங்கேற்ற விழா அமைந்தது.

## ஆற்றுகையில் கலைஞர்கள் பங்குகொண்ட விதமும் அவர்களிடம் ஏற்பட்ட மாற்றங்களும்

பாரம்பரிய ஆற்றுகைக் கலை மனித வாழ்வியலுடன் கலந்து அவர்களை ஆற்றுப்படுத்துகின்றது. இவை வெறும் இரசனைக்கு மாத்திரம் இன்றி அதனை பார்க்கும் பார்வையாளரிடமும், பங்குபற்றும் கலைஞர்களிடமும், புத்துணர்ச்சியுடன் இணைந்த ஆரோக்கியமான மாற்றங்களை ஏற்படுத்தும். முள்ளியவளைப் பிரதேசத்தினுடை மகிடிக்கூத்தினை ஆற்றுகைமைய பங்குகொள் ஆற்றுயாக செய்யப்பட்டது. ஆற்றுகையில் பங்கு கொண்ட கலைஞர்கள் ஆரம்பத்தில் கலைஞர்களை ஒன்றாக சந்தித்தபோது பெரிதாக ஆர்வம் காட்டவில்லை. எனினும் மகிடிக்கூத்தின் முக்கியத்துவம், அதன் இன்றைய தேவை தொடர்பாக கலந்துரையாடியதை தொடர்ந்து அடுத்தடுத்த நாட்களில் அவர்களாகவே களரியடித்தல் வெளியில் ஒன்று கூடினார்கள். இது அவர்களிடம் ஏற்பட்ட முதல் மாற்றமாகும்.

"சிறுவயதில் அரியாத்தை என்னும் கூத்தில் ஆடியுள்ளேன். அதனைத் தொடர்ந்து தற்போது மகிடிக்கூத்தில் முஸ்லீம் பாத்திரமாக நடித்துள்ளேன். இந்தப் பாத்திரம் எனக்குப் பொருத்தமாக அமைந்தது என பார்வையாளர்களால் கூறப்பட்டது. வளர்ந்து வரும் இளம் தலைமுறையினருக்கு ஒரு புதிய ஆற்றுகையாக அமைந்துள்ளது. தொடர்ச்சியாக ஆற்றுகை செய்து அதில் நடிக்க ஆசைப்படுகிறேன்" (நேர்காணல், த.விஜிதரன்) என்றும், "நான் பாரம்பரியக் கலைச்செயற்பாட்டில் பதினாறு வயதிலிருந்து ஈடுபட்டு வருகிறேன். இருபத்திரண்டு வருடங்களுக்கு மேலாகக் கூத்துக்களில் ஒப்பனை கலைஞராக அண்ணாவியார் N.S. மணியம் அவர்களுடன் இணைந்து செயற்படுகிறேன். பாரம்பரிய மகிடிக்கூத்து இதுவரை காலமும் ஆற்றுகை செய்யத் தவறியதை எண்ணி மனம் வருந்துகிறேன். ஆனால், இன்று எமது ஆலய முன்றலில் பெரும் மக்களை ஒன்று திரட்டி ஆற்றுகை செய்தது மகிழ்ச்சியை தந்துள்ளது" என்றும், "தொடர்ச்சியாகக் கோவலன் கூத்து போல மகிடிக்கூத்தினை ஆற்றுகை செய்வதற்கு மக்களுக்கும், எங்களுக்கும் ஓர் உத்வேகத்தை கொடுத்துள்ளது" (நேர்காணல், து.ஜெயகாந்தன்) என்றும், "மகிடிக்கூத்தில் பொலிஸ் பாத்திரத்தை நடித்துள்ளேன். தற்போது ஊடகத் துறையிலும், எழுத்துத்துறையிலும், குறும்படங்களை தயாரித்து செயற்பட்டு வருகிறேன். எமது பிரதேசத்தில் நிறைய கலைகள் மூத்த கலைஞர்கள் ஆடப்பட்டுள்ளது. அவர்களுக்கு பின் இளம் கலைஞர்கள் தொடர்ந்து கற்றுக்கொள்ளாத காரணத்தால் பல கலைகள் அழிந்து விட்டது. இதேபோன்று மகிடிக்கூத்தும் வழக்கிழந்து போனதால் புதிய வடிவமாகக் காணப்பட்டது" (நேர்காணல், சி.சிவரஜன்) என்றும், "கலைகளுக்குப் புத்துயிர் கொடுத்துத் தொடர்ந்து ஆற்றுகை செய்வதற்கான மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளீர்கள் பெரும் மகிழ்ச்சியாக உள்ளது. ஏனைய கூத்துப் போல திருவிழாக் காலத்தில் இரவு நேரத்தில் ஒலி, ஒளி ஒப்பனைகளுடன் கதையினை மெருகூட்டி ஒவ்வொரு வருடமும் ஆற்றுகை செய்ய வேண்டும். மகிடிக் கூத்தினை நீண்ட நாள் ஒத்துகையுடன் செய்து இருந்தால் வந்த மக்களை விட அதிகளவான மக்கள் கூட்டம் வந்திருக்கும் என்பது என்னுடைய கருத்து (நேர்காணல், அ.பிரகலாதன்) என்றும், "மகிடிக்கூத்தில் காவடி ஏற்று பாத்திரமாக ஆடியுள்ளேன். இச்செயற்பாட்டால் வழக்கிழந்து காணப்படும் எங்களுடைய கலையை அறிந்து கொண்டு ஆற்றுகை செய்வதற்கான வழியை திறந்துள்ளீர்கள். பெரும் அளவிலான மக்களை எதிர்பார்க்கவில்லை. ஆனால் அதிக மக்களை கண்டதும் ஆனந்தமாக அமைந்தது" (நேர்காணல், சி.நவனீதன்) என்றும், "மகிடிக் கூத்தில் மத்தளம் வாசித்தேன். இதுவரைக்கும் மகிடிக்கூத்தைப் பார்த்தது இல்லை கேள்விப்பட்டுள்ளேன். நகைச்சுவையாக இருந்தது. பெரும் அளவிலான மக்கள் வருவார்கள் என நினைக்கவில்லை வந்தது சந்தோஷமாக இருந்தது. ஆரம்ப காலத்தில் பாரம்பரிய கலையில் பெரும் திரளான மக்களை பார்த்துள்ளேன். யுத்தம், இடப்பெயர்வுக்கு பின் இன்று தான் அதிகளவான மக்கள் கூடியிருந்து கூத்தை பார்த்ததை காண்கிறேன்" (நேர்காணல், ச.செந்தூரன்) என்றும், "மகிடிக் கூத்தினை பழகும் போது நகைச்சுவையாக காணப்பட்டது. இதுவரைக்கும் பார்த்தது இல்லை. புதிய கூத்தாக அமைந்தது. இக்கூத்தில் பேய்குஞ்சுக்கு ஆடும்போது அதன் ஆட்டம், பாடல் முறை வித்தியாசமாகவும், சிரிப்பூட்டும் வகையிலும் அமைந்தது. ஒப்பனை பாத்திரத்திற்கு பொருத்தமாக இருந்ததுடன் பெரும் அளவிளான மக்களை கண்டதும் மகிழ்ச்சியாக இருந்தது. கூச்ச சுபாவங்கள் விட்டு சமூக மக்களுடன் இணைந்து நடிக்க புதிய மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது" (நேர்காணல், ர.சொரூபன்) என்றும் கூறியமை குறிப்பிடத்தக்கன.

ஆற்றுகையில் தொடர்ந்து ஈடுபடுவதால் மன இறுக்கம், சோர்வு நீங்கி உடல், மனம் ஆரோக்கியமாக செயற்பட்டு மகிழ்வை கொடுப்பதாக நேரடியாகக் கூறினார்கள். மகிடிக் கூத்தினை மீளவும் ஆய்வுப் பிரதேசத்தில் நிகழ்த்துகை நிலைக்குக் கொண்டுவரும் செயற்பாட்டில் கலைஞர்கள் கொண்டதன் ஊடாக மகிழ்ச்சி, ஒற்றுமை, உளவிருத்தி, மன அமைதி, உடல்ரீதியான பயிற்சிகளை பெற்று அடுத்த தலைமுறையினருக்கு இதனை கையளிக்கும் ஆளுமையான கலைஞர்களாக மாற்றம் பெற்றுள்ளனர்.

கலைஞர்களை ஒழுங்கு செய்து அதனை நெறிப்படுத்தி, ஆற்றுகை நிலைக்கு அண்ணாவியார் சிவசிதம்பரம் அவர்களையும் அழைத்து எல்லோரயும் ஒன்றாக இணைத்து வந்ததால் நானும் மகிடிக் கூத்தினை பழக்குவதற்கு சம்மதித்தேன். இக்கருத்தினை 'அடிப்புறத்திலிருந்து அடிப்புறத்துக்கு' என்ற கோட்பாடு விரிவுரையாளர் சு.சந்திரகுமார் அவர்களினால் முன்வைக்கப்பட்டு அதனைச் செயற்படுத்தும் வகையில் மாணவர்களை மையப்படுத்தி ஆற்றுகைமையக் கற்றல் வடிவில் பெற்ற அனுபவங்களைக் கொண்டு ஐம்பது வருடங்களுக்கு முன்னர் ஆற்றுகை செய்யப்பட்ட மகிடிக் கூத்தினை மீள ஆற்றுகை நிலைக்கு செயற்படுத்த வேண்டிய தேவையினை உணர்ந்து இவ் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது (நேர்காணல், N.S. மணியம்).

நகைச்சுவைக் கூத்தாக இருப்பதால் சிரிப்பூட்டும் வண்ணம் அபிநய தன்மையில் உரையாடல் அமைந்ததால் இயல்பாக நடித்தனர். "சமகால நவகாலனிய முன்னெடுப்பு உளச்சிக்கலை ஏற்படுத்தி அகத்தில் மாற்றத்தைச் செய்யும் அபத்தம் காலனியக் கல்விமுறையினூடாக வந்தது. அது தொழில்நுட்ப ஊடகத்தினூடாக மேலெழுந்து கூட்டுப்பண்பாட்டு வெளியில் தாக்கம் செலுத்துகிறது. ஆனால், சமூக வாழ்வியல் கலையான கூத்தைக் குறுந்தகடுகளில் பதிவுசெய்து விற்பனைக்குரிய பண்டமாகப் பார்க்க வைப்பது" (சந்திரகுமார்.சு, 2019, p. 649) ஆபத்தானது. பாரம்பரிய அரங்கில் கூட்டுச்செயற்பாட்டையும், ஒற்றுமையையும், காணலாம் களரியடித்தல் செயற்பாட்டில் நேரடியாக பார்க்கும் போது உள்ளத்தில் கூட்டுணர்வினை பகிர்தல் எவ்வாறு அதிகரிக்கின்றது என்பதைப் பங்குகொண்ட அனுபவத்தில் அவதானிக்கப்பட்டது.

## சமூக நல்லிணக்கமும் மகிடிதாற்றுகையும்

மகிடிக்கூத்தில் சடங்குவடிவத்தை மையப்படுத்தி, அதனூடாக ஒரு மக்கள் குழுமத்தின் அதிகார ஒடுக்குதல் எதிர்ப்புணர்வுவை வெளிப்படுத்தும், உள ஆற்றுப்படுத்தலை மையப்படுத்தும் ஆற்றுகை அழகியல் நுட்பங்கள் நிறைந்துள்ளன (சந்திரகுமார்.சு, 2022, p. 95). ஆனால், "முள்ளியவளையில் ஆற்றுகை செய்யப்பட்ட மகிடிக்கூத்தானது பிராமணருக்கும், முஸ்லிம்களுக்கும் இடையில் உள்ள தகராற்றை மையப்படுத்தி மந்திர தந்திர வித்தையால் நகர்த்தப்படுகின்றது. இதில் இன, மத ரீதியான முரண்பாட்டை ஏற்படுத்தும் என்றால் அதனைத் தவிர்த்தல் அல்லது சமூக நல்லிணக்கம் சார்ந்த பாத்திரங்களை உருவாக்கி சமாதானத்தை உருவாக்கும் வகையில் முன்னெடுத்தல்"என்ற கருத்து மாற்றங்கள், ஆலோசனைகளை சு.சந்திரகுமார் நேரடி அவதானிப்பு மூலம் கலந்துரையாடினார்.

எல்லாம் எனக்குப் புதிய கலை அனுபவத்தை கொடுத்ததுடன், நான் தொடர்ந்து இப்பாரம்பரிய கலைகளில் ஈடுபட வேண்டும் என்ற ஆர்வத்தை தூண்டியுள்ளது. காலனியச் சிந்தனை, நவீன கல்வி முறையால் தூங்கியிருந்த எமது மகிடிக்கூத்தை உங்களுடைய ஆய்வு செயற்பாட்டாலும், பல்கலைக்கழக விரிவுரையார் சு.சந்திரகுமாரினாலும் மீள உருவாக்குவதற்கு உந்து சக்தியாக செயற்பட்டுள்ளீர்கள் என ஊர்மக்கள் கூறினர்.

ஆரம்பத்தில் இக்கூத்தினை செய்வதற்கு விரும்பவில்லை. ஆனால் கூத்தரங்க செயற்பாட்டுக்குள் ஒன்றிணைந்த பின் அதன் முக்கியத்துவத்தை விளங்கச்செய்து தொடர்ச்சியாகச் செய்யவேண்டும் என்ற பெரும் மாற்றத்தைத் திறந்தவெளிக் கூத்தரங்கு ஏற்படுத்தியுள்ளது. எல்லா மாணவர் மத்தியிலும் ஒவ்வொரு வருடமும் தொடர்ச்சியாகக் காட்டு விநாயகர் ஆலயத்தில் ஆற்றுகை செய்ய வேண்டும் என்ற சிந்தனை மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது. ஆரம்பத்தில் அதிகளவான மக்கள் வருவார்கள் என தெரியாது. ஆனால், பெருமளவிலான மக்கள் கூத்துப் பார்க்க வந்தனர்.

முதலாவது இங்கு வந்த அரைவாசி மக்களுக்கு மகிடிக்கூத்து தெரியாது, இரண்டாவது இந்த கலைஞர்கள் ஆடினால் ஒரு கூட்டம் வரும் இவ்வாறு அண்ணாவியார் N.S. மணியம் ஆற்றிய உரைமூலம் கூறியதுடன், இந்த கலையினைக் கைவிடாமல் தொடர்ந்து ஆற்றுகை செய்வதற்குச் சிறந்த கருத்தாக அமைந்தது. பிரதி பலன் இல்லாமல் செய்த கலையை பாதுகாக்க சமூக மக்கள் எனக்கு பொறுப்பினை கொடுத்துள்ளனர். இன்று வந்த மக்களுக்கு ஒரு புதிய செய்தியாக வழக்கிழந்த பாரம்பரியக் கலை பற்றிக் கூறப்பட்டுள்ளது. தற்கால நவீன கல்வி செயற்பாட்டால், சிக்கித்தவிக்கும் மாணவர்களுக்குப் புத்துணர்வையும், மகிழ்வையும், கூட்டுச்செயற்பாட்டின் முக்கியத்துவத்தையும் ஏற்படுத்தும்வகையில் மகிடிக்கூத்தின் ஆற்றுகைத் தன்மை சமூகச் சக்தியாகத் திகழ்கின்றது.

முள்ளியவளை பிரதேசத்தில் பல கலைகள் இயங்கு நிலையில் காணப்படுகிறது. அந்த வகையில் ஐம்பது வருடங்களுக்கு முன்னர் அரியாம் பொய்கை செல்லத்துரை அண்ணாவியார் அவர்களால் திறமைக் கொண்ட கலைஞர்களை இணைத்து காட்டு விநாயகர் ஆலயத்தில் மகிடிக்கூத்து

ஆற்றுகை செய்யப்பட்டது. ஆரம்ப காலத்தில் விவசாயம் செய்யும் மக்களே அதிகம் காணப்பட்டதால், உடல் களைப்பினைப் போக்கி மன ஆற்றுப்படுத்தலைப் பெறுவதற்குச் சித்திரை, வைகாசி, பங்குனி மாதத்தில் தொழில் இன்மையால் பொழுது போக்கிற்காக நகைச்சுவை வடிவில் மேற்கொள்ளப்பட்டது. தந்தையார் சந்திரசேகரம் அவர்களுக்கு பின் நானே இக்கூத்தில் ஆற்றுகை செய்ததாக அண்ணாவியார் ச.சிவசிதம்பரம் கூறினார். அத்துடன், "மேலும் மெருகூட்டி மக்களை ஆற்றுப்படுத்தும் வகையில் செய்ய வேண்டும் என்ற சிந்தனை மாற்றத்தை வழங்கியுள்ளது. பாரம்பரிய அரங்கு மக்கள் அரங்காக செயற்படுவதால் கூட்டு முறைமை, உளநிலைப்பகிர்வு, சமுதாய வாழ்வியல் வெளிப்பாடு, கருத்து வெளிப்படும் சுதந்திரம், போன்றன உயிர்ப்பொறிமுறையாகக் கொண்டு இயங்கி வருகின்றது" (நேர்காணல், ச.சிவசிதம்பரம்) என்றார்.

சு.சந்திரகுமாரின் ஆற்றுகை மையக் கற்றல் கற்பித்தலில் ஈடுபட்டதாலேயே இவ்வாய்வைச் செய்ய வழிப்படுத்தியது. ஆற்றுகை மைய ஆய்வு முறையியலில், அம்மக்களின் முழு ஒத்துழைப்புடன் இக்கூத்து மீள ஞாபகங்களில் இருந்து மேற்கிளம்பி வடிவம் பெற்றது. "ஆராய்ச்சி எப்பொழுதும், ஆய்வாளருக்கும், ஆய்வுப்பொருளுக்கும், சமூகத்திற்கும் பயனுடையதாக இருக்கவேண்டும். அதுவே அவ்வாய்வின் வெற்றி. ஆற்றுகைக் கலையைக் கற்பிப்போருக்கும் ஆராய்வோருக்கும் அடிப்புறக் கள அனுபவமும், ஈடுபாடும் அவசியம்"என்பர் சு.சந்திரகுமார் (நேர்காணல், 2022.06.27).

## ஆற்றுகையின் பின்னரான அவதானிப்பும் விமர்சனங்களும்

இக்கூத்து இரு இனங்களை மையப்படுத்தி இருப்பதால் சமூகத்தில் முரண்பாட்டை ஏற்படுத்தலாம் என்ற கருத்துக்கள் முன்வைக்கப்பட்டது. அதனை எப்படி நிவிர்த்தி செய்து ஆற்றுகை செய்யலாம் என ஆலோசித்து உரையாடல், மாற்றம் மையாளப்பட்டது. தமிழர்களை பேய்குஞ்சுகளாகவும், முஸ்லிம்களை பிராமணர்களுக்கு எதிரிகளாவும் காட்டும் போது தற்காலத்தில் பொருத்தம் இல்லாமல் அமைந்தது அதற்கு பதிலாகச் சமூக நல்லிணக்க பாத்திரங்களைக் கொண்டு வரலாம் என்ற கருத்துக்கள் கூறப்பட்டது. மேலும் கதைக் கருவை மாற்றலாம் என விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டது.

"ஆற்றுகை நிலையில் முன்னெடுக்கும் போது மக்கள் மத்தியில் உருவாகும் அறிவியல்ரீதியான உணர்வு நிகழ்த்துவோருக்கும், சமூகத்துக்கும் இடையில் உள்ள ஊடாட்டப் படைப்பாக்கத்தை வெளிப்படையாகக் கொண்டுவருதல் முக்கியமானது. ஒரு பிரச்சினை சார்ந்த விடயத்தைப் பேசுதல், இனம் சார்ந்த முரண்பாடு ஏற்படாமல் இருக்கச் சமூக நல்லிணக்கப் பாத்திரங்களை உருவாக்குதல் மேலானது. நல்லிணக்கத்தை சீர்குலைக்கும் பாத்திரத்தை ஊர் மக்கள் அடித்து துரத்துவது போலவும் காட்டலாம். மேலும், இப்படைப்பை சமூகம் சார்ந்த விழிப்புணர்வு விடயத்தை முன்னெடுக்கும் வகையில் கையாளுதல். முஸ்லிம், பிராமணர் தகராறு முஸ்லிம் செய்யும் போது பிராமணருக்கு எதிராகப் பார்த்தல். பிராமணர் செய்யும் போது முஸ்லிமை எதிராகப் பார்த்தல் போன்றன தகராற்றை அடிப்படையாகக் கொண்டு இருப்பதால் உடல் உள ஆற்றுப்படுத்தல், நகைச்சுவை போன்றவற்றால் சமூக நெருக்கடிகள் இல்லாமல் செய்யலாம். மேலும் அதற்குள் இருக்கும் மந்திர தந்திர பலத்தைப் பயன்படுத்தல், அந்தப் பிரதேசத்திலே ஒற்றுமையாக வாழக்கூடிய சூழலைக் கொண்டு வருதல் போன்றன இரு இனங்களின் ஒற்றுமையை மையப்படுத்தி ஆற்றுகை செய்யலாம்" (நேர்காணல், 2022.05.26) என சு.சந்திரகுமார் குறிப்பிடுவது கவனத்திற்குரியது

இது பற்றி சு.சந்திரகுமார் மேலும் மட்டக்களப்பு மகிடிக் கூத்தாற்றுகையுடன் வியாக்கியானித்து விபரிப்பதும் சிந்திக்கத்தக்கது. "மட்டக்களப்பில் ஆற்றுகை செய்யப்படும் மகிடிக் கூத்தில் இதன் தன்மை வெளிப்படையாக இல்லை பொலிசார், விதானையார், உடையார் போன்றவர்கள் உடல் சார்ந்த நகைச்சுவை வடிவில் கொண்டு வருதல் இயல்பாக காணப்படும். ஆனால், போடியாரைக் கொண்டு வந்தால் பிரச்சினையாக இருக்கும். மக்கள் நையாண்டி செய்து கலந்துரையாடல் மூலம் கொண்டு வரலாம். ஆனால், நேரடியாகத் தாக்க முடியாது. முல்லைத்தீவு மகிடிக்கூத்துக் கதை வடிவம் ஒரே கதையம்சத்தைக் கொண்டு மக்களிடையே சுருக்கி, விரிவுப்படுத்தி ஊருக்கு ஊர் சில வேறுபாடுகளைக் கொண்டு காணப்படுகின்றது. திரும்ப ஆற்றுகை செய்கின்றபோது குறவர்கள், வேடுவர்கள் வருவதாகக் காட்டலாம். புதிய படிப்பினை நோக்கில் கையாளும்போது யாருக்கும் பாதகம் இல்லாமல் சமூக விரோதத்தை ஏற்படுத்தாமல் நிகழ்த்த வேண்டும்" (நேர்காணல், சு.சந்திரகுமார், 2022.05.26) எனும் கருத்தாக்கம் குறிப்பிடத்தக்கது

மகிடியில் உள்ள உரையாடல், பேச்சுமொழி, சொற்பிரயோகம் சரியாகப் பயன்படுத்த வேண்டும் சு.சந்திரகுமாரின் நேரடி அவதானிப்புமூலம் கலைஞர்களுக்கு ஆலோனை வழங்கப்பட்டது. உதாரணம்: பிராமணர் முஸ்லிம் சின்ன மரைக்காயரைத் தள்ளிவிட்டு ஏசுகிறார். இறுதியில் முஸ்லிம் மரைக்காயர்கள் மன்னிப்புக் கேட்பதாகக் காட்டப்படுகிறது. ஆனால், 'சமூக ஒற்றுமையை ஏற்படுத்தும் வகையில் பிராமணர்களும் உங்களுக்கு அடித்து விட்டோம் எங்களை மன்னித்து விடுங்கள்' என முஸ்லிம்களிடம் கேட்பதும், இரு சாராரும் மன்னிப்புக் கேட்டு சமாதானமாக வாழ்வதும் முக்கியமானது. எனவே, இந்த பாத்திரங்கள் முரண்பாட்டை ஏற்படுத்தும் என்றால் அதனை அப்படியே

கொண்டு வராமல் வேறு வகையான மகிடிக்கூத்தை செய்தல். அல்லது சமூக நல்லுறவைச் செய்யும்வகையில் சமூக நல்லிணக்கப் பாத்திரங்களை உருவாக்கிக் கூத்தின் ஆரம்பத்திலே சமூக நல்லிணக்கத்திற்கான ஆற்றுகை வடிவம் எனக் கூறி யதார்த்தத்தில் நல்லிணக்கத்தை சீர்குலைக்கும் தன்மை இருந்தால், இனரீதியான அரசியல் நிலை இருந்தால் கலந்துரையாடி நீக்க விடுவது மிக முக்கியமானது. ஆற்றுகை முறைமையில் நல்லிணக்கத்தை மையப்படுத்திக் கையாள வேண்டும் என சு.சந்திரகுமார் குறிப்பிட்டார் (நேரடி அவதானிப்பும் கலந்துரையாடலும்).

மகிடிக்கூத்தினை மீளவும் ஆய்வு பிரதேசத்தில் நிகழ்த்துகை நிலைக்குக் கொண்டுவரும் செயற்பாட்டில் கலைஞர்கள் கொண்டதன் ஊடாக மகிழ்ச்சி, ஒற்றுமை, உளவிருத்தி, மன அமைதி, உடல்ரீதியான பயிற்சிகளைப் பெற்று அடுத்த தலைமுறையினருக்குக் கையளிக்கும் ஆளுமையான கலைஞர்களாக மாற்றம் பெற்றுள்ளனர். தொடர்ந்து இக்கூத்தினை மெருகூட்டி இரவு நேரத்தில் ஆற்றுகை செய்வதற்குத் தீர்மானித்துள்ளனர். பெரும் அளவிலான மக்கள் பார்வையாளராகக் கலந்து கொண்டதால், இன்றைய நவீனமயமாக்கத்திலிலும் பாரம்பரிய ஆற்றுகைகளை விரும்புகின்றனர் என்பதை நேராக கண்டதால், தொடர்ச்சியாக எமது மக்கள் முன்னிலையில் ஆற்றுகை செய்ய வேண்டும் என்ற சிந்தனை மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது. “கூத்தின் ஆற்றுகைப் பலம் அதன் சமுதாயமயப்பட்ட தன்மைக்கும் கூத்தின் பின்னரான அக்கூத்துப் பற்றிய சமுதாய உரையாடலின் போதும் கணிக்கப்படும்” (சந்திரகுமார்.சு, 2020, p. 232). மகிடிக்கூத்தை ஆற்றுகை செய்ததன் பின்னர் அக்கூத்துப் பற்றிய உரையாடல் பல புரிதல்களைத் தந்தது. அத்துடன், ஞாபகப்படுத்தல் மூலம் ஒரு இனத்தின் கலை வாழ்ந்து இன்று உயிர்ப்பெற்றுள்ளது.

## முடிவுரை

இப்பிரதேச மகிடிக் கூத்து தொடர்ந்து நிலைநிறுத்தும் நோக்கில், அடிப்புற செயற்பாடாக மீள் ஆற்றுகை செய்யப்பட்டது. எமது பாரம்பரியக் கலைகளைத் தொடர்ச்சியாக ஆற்றுகை செய்ய வேண்டும் என்ற எண்ணத்தை இன்றைய இளைஞர்கள், பெரியவர்கள் முன்னெடுக்க வேண்டும் எனும் நோக்கில் மகிடிக்கூத்தானது மீளாற்றுகை செய்யப்பட்டு, அதன் இலக்கையும் அடைந்தது. ஞாபகப்படுத்தல் என்னும் செயற்பாடு கலந்துரையாடல் வடிவில் மீட்க்கப்பட்டு ஆற்றுகை நிலைக்குக் கொண்டு வரப்பட்டது. மக்களின் கலை அடையாளம் ஐம்பது வருடங்களாக சில கலைஞர்களின் நினைவுகளில் வாழ்ந்து வந்துள்ளது. இதனைத் தொடர்ச்சியானக் கலந்துரையாடல், களரியடித்தல்மூலம் மீண்டும் உயிர்க்கொடுத்து ஆற்றுகையாக எதிர்காலத் தலைமுறையினருக்கு கையளிக்கப்பட்டுள்ளது. ஐம்பது ஆண்டுகளின் பின்பு ஆற்றுகைச்மைய செயற்பாடுமூலம் ஞாபகப்படுத்தல் என்னும் செயற்பாட்டால் மீளாற்றுகை செய்யப்பட்டுள்ளது. இது பெரும் மாற்றத்தையும் மக்கள் மத்தியிலும், கலைஞர்கள் மத்தியிலும் ஏற்படுத்தியது. அத்துடன், அதிகம் முரண்பாடான கருத்துக்கள் இக்கூத்தின் உள்ளடக்கத்தில் இருப்பதால், இந்த மகிடியைக் கருவாகக் கொண்டு புதிய கருத்துக்களை பயன்படுத்துவது அவசியமாகும்.

## மேற்கோள்கள்


ஆனந்தராஜா. நா. (2002). வடபுல நாட்டார் அரங்கு. றெயின்போ மினிலாப் திருகோணமலை

சண்முகசர்மா, ஹேமா. (2003). வற்றாப்பளை கருணை மலர். வற்றப்பளை கண்ணகி அம்பாள் கோயில் பரிபாலன சபை வெளியீடு.

சந்திரகுமார், சு. (2017). பாரம்பரியக் கூத்தரங்கின் உடுப்புக்கட்டுதலில் ஏற்படும் மாற்றங்கள் - கன்னங்குடாவில் ஆற்றுகை செய்யப்பட்ட கூத்துக்களை அடிப்படையாக கொண்ட ஓர் ஆய்வு, Proceedings of 7th Intemational Symposium, SEUSL.

சந்திரகுமார், சு. (2018). கூத்துருவாக்கத்திற்கான களரியடித்தல்: இளம் கூத்தர்களையும் உருவாக்கும் வெளி ஓர் பங்குகொள் ஆய்வு”. தமிழ்த்துறை வெளியீடு. சிறப்புப் பதிப்பு. சதக்கத் ஆய்விதழ். சதக்கத்துல்லாஹ் அப்பா கல்லூரி (தன்னாட்சி). தஹ்மத் நகர். திருநெல்வேலி. தமிழ் நாடு. இதழ் vi. ப. 07-17.

சந்திரகுமார், சு. (2019). Debut Event of Kooththu (Tamil Regional Art Form) In the Cultural Space: Arichanthiran Drama Vadamodi Koothu, Proceedings, Sothu Eastern University International Arts Research Symposium.

சந்திரகுமார், சு. (2020). கூத்திற்கு சமுதாய அரங்கத் தன்மையைக் கொடுக்கும் அதன் தொடர் செயற்பாடுகள் - ஓர் ஆய்வு, Proceedings of National Research Symposium 2019. சுவாமி விபுலானந்த அழகிற் கற்கைகள் நிறுவகம், கல்லடி, மட்டக்களப்பு.

சந்திரகுமார், சு. (2022). மகிடிக் கூத்தாற்றுகையில் வெளிப்படும் அதிகார எதிர்ப்புணர்வு - ஓர் ஆய்வு, சர்வதேச தமிழ் ஆய்விதழ், 4(4). 94-102.

சந்திரகுமார்.சு. (2014). ஈழத்து கூத்தியல் ஆய்வில் காரை செ. சுந்நதரம்பிள்ளையின் வட இலங்கை நாட்டார் அரங்கும் பேராசிரியர் சி. மௌனகுருவின் மட்டக்களப்பு மரபுவழி நாடகங்களும் ஓர் ஒப்பீட்டு ஆய்வு.

சந்திரகுமார்.சு. முதுநிலை விரிவுரையாளர். கிழக்குப்பல்கலைக்கழகம். இலங்கை. வயது 45. 2022.26.05.

சிவசிதம்பரம்.ச. அண்ணாவியார். முள்ளியவளை. வயது 79. 05.05.2022.

சுந்தரம்பிள்ளை, செ. (2000). வட இலங்கை நாட்டார் அரங்கு. குமரன் புத்தக இல்லம். கொழும்பு. சென்னை.

சுப்பிரமணியம்.ந. (N.S. மணியம்). அண்ணாவியார். முள்ளியவளை. வயது 69. 11.05.2022.

சுயந்தன்.ர. இசைத்துறை ஆசிரியர். முள்ளியவளை. வயது 28. 07.05.2022.

செல்லத்துரை, அ. (2000). வன்னி பிராந்திய கூத்துக்கள் பாரம்பரிய தேடல். இந்நூலில் வன்னிப் பிராந்திய கூத்துக்கள் பற்றி தெளிவாக கூறப்பட்டுள்ளது.

முருகுப்பிள்ளை.இ. அண்ணாவியார். முள்ளியவளை. வயது 93. 17.50.2022.

மௌனகுரு, சி. (1992). பழையதும் புதியதும். விபுலம் வெளியீடு. மட்டக்களப்பு.

மௌனகுரு, சி. (2014). மட்டக்களப்பு மரபுவழி நாடகங்கள். குமரன் புத்தக இல்லம்.

ஜெயகாந்தன்.து. ஒப்பனை கலைஞர். முள்ளியவளை. வயது 49. 20.05.2022.

## References

Anantharaja, N. (2002). Vadapula Nattat Arangu. Rainbow Minilab, Trincomalee, Sri Lanka

Chandrakumar, S. (2014). Folk Theatre of North Sri Lanka by Karai C. Sundarampillai and Traditional Dramas of Batticaloa by Professor C. Maunaguru: A Comparative Study in the Field of Eelam Koothu Research.

Chandrakumar, S. (2022). The Sense of Resisting Power in the Performance of the Makidi Kooththu (Art Form) - A Study. International Research Journal of Tamil, 4(4), 94-102. https://doi.org/10.34256/irjt22411

Chellathurai, A. (2000). Vanni Piranthiya Koothukal Parambariya Thedal

Maunaguru, C. (1992). Palayathum Puthiyathum. Vipulam Publications, Batticaloa, Sri Lanka

Maunaguru, C. (2014). Mattakalappu Marabu vali Nadakangal. Kumaran Book House, Sri Lanka.

Shanmugasarma, H. (2003). Vattappalai Karunai Malar. Vattappalai Kannaki Ambal Ambal Kovil Paripalana Sabai Veliyedu, Sri Lanka

Sundarampillai, C. (2000). Vada Ilankai Nattar Arangu. Kumaran Book House, Colombo, Sri Lanka.

### Conflict of interest

The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

### About the License

© The Author 2026. The text of this article is open access and licensed under a Creative Commons Attribution 4.0 International License

### Cite this Article

Nadarasa Ketheeswari, Discovery and Restoration of an Obsolete Form of Mahidikkoothu in the Mullaitivu Region - A Study, Indian Journal of Tamil, 7(2), (2026) 1-10. https://doi.org/10.54392/ijot2621